வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் – சரவண குமார்

தேதி 9.4.2025 நேரம் மாலை 6.10 மணி

-------------------------------------------------------

<u>தலைப்புச் செய்திகள்</u>

- பல்வேறு துறைகளில் இந்தியாவின் முயற்சிகள், மற்றும், அதன் விளைவுகளால், இந்தியா மீதான உலகின் நம்பிக்கை ஆழமாகி வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.
- ரிசர்வ் வங்கியின் ரெப்போ வட்டி விகிதம், 6 சதவிகிதமாக, மேலும் குறைக்கப்பட்டுள்ளது.
- முதுபெரும் தலைவர் குமரி அனந்தன் மறைவிற்கு, பிரதமர் உட்பட தலைவர்கள் பலரும், இரங்கல் தெரிவித்துள்ளனர்.
- முன்னாள் ராணுவத்தினருக்கு மருத்துவ சேவை வழங்க, பாதுகாப்பு அமைச்சகம், புதுச்சேரி ஜிப்மருடன், புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது.

<u>ே□ாடி-நவ்கர்</u>

இன்றைய உலகின் முக்கிய பிரச்சனையான பருவநிலை மாற்றத்திற்கு தீர்வாக திகழும், எளிமையான, நிலையான வாழ்க்கை முறைகளை, பல நூற்றாண்டுகளாகவே. ஜெயின் சமூகத்தினர் பின்பற்றி வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார். இன்று புதுடெல்லியில் ஜெயின் சமூகத்தினரின் நவ்கர் மகாமந்திர தின விழாவில் அவர் உரையாற்றினார்.

பல்வேறு துறைகளில் இந்தியாவின் முயற்சிகள் மற்றும் அதன் விளைவுகளால் இந்தியா மீதான உலகின் நம்பிக்கை ஆழமாகி வருவதாக

பிரதமர் கூறினார்.  சமூகங்களுக்கு இடையில் இத்தகைய ஒத்துழைப்பை வலியுறுத்துவதே ஜைனர்களின் கொள்கை என்றும் அவர் குறிப்பிட்டார். இதுகுறித்து கூடுதல் விவரங்கள்…………..

(வாய்ஸ்)

*மோடி-நவ்கர்*

(வாய்ஸ்)

பிரதமர் திரு நரேந்திர மோடி நவ்கர் மகா மந்திர விழாவின் போது, ஜைனர்களின் முக்கிய பிராத்தனையான  நவ்கர் மகா மந்திரத்தை, 108 நாடுகளைச் சேர்ந்த மக்களுடன் இணைந்து ஓதினார். இது வெறும் மந்திரம் அல்ல என்றும், முன்னேறிய இந்தியா என்னும் தொலைநோக்கு பார்வையுடன், இதற்கு நேரடி தொடர்பு  இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். நவ்கர் மகாமந்திரப் பிராத்தனைக்கு ஏற்ப, தூய்மை, மரம் வளர்ப்பு, நீர் சேமிப்பு, ஏழைகளுக்கு ஆதரவு உள்ளிட்ட 9 உறுதி மொழிகளை, அனைத்து மக்களும் ஏற்க வேண்டுமென அவர் கேட்டுக் கொண்டார்.

பாலி-  மொழிக்கு, அரசு, செம்மொழி அந்தஸ்து வழங்கி இருப்பதை, பிரதமர் தமது உரையில் சுட்டிக் காட்டினார். இதுபோன்ற நடவடிக்கைகள் மூலம் ஆன்மிக உலகிற்கு வழிகாட்டும் அதே வேளை, நவீன தொழில் நுட்பங்கள் மூலமான வாய்ப்புகளையும் தீவிரமாக ஆராய்வதே, புதிய இந்தியா என்றும் அவர்  குறிப்பிட்டார்.

*அமைச்சரவை*

நீர் மேலாண்மை மற்றும் ஆயக்கட்டு மேம்பாட்டுப் பணிகளை, பிரதமரின் கிரிஷி சிஞ்சாயி- நீர் பாசன திட்டத்தின் துணைத் திட்டமாக மாற்றி நவீனப்படுத்தவும், நடப்பு நிதியாண்டில் இத்திட்டத்திற்கு, ஆயிரத்து 600 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யவும் மத்திய அமைச்சரவை

முடிவு செய்துள்ளது. திருப்பதி-பாகாலா-காட்பாடி ஒற்றை ரயில் பாதையை, ஆயிரத்து 332 கோடி ரூபாய் மதிப்பில் இரட்டைப் பாதையாக மாற்றும் திட்டத்திற்கும் மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. மத்திய தகவல்-ஒலிபரப்பு அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் இதைத் தெரிவித்தார்.

*__ரிசர்வ் வங்கி__*

ரிசர்வ் வங்கி, இதர வங்கிகளுக்கு வழங்கும் குறுகிய காலக் கடன் மீதான ரெப்போ வட்டி விகிதத்தை, மேலும் 25 சதவிகிதப் புள்ளிகள் குறைத்து, 6 சதவிகிதமாக நிர்ணயித்துள்ளது. 6 உறுப்பினர் பணக் கொள்கைக் குழுவின் கூட்டத்தில் ஒரு மனதாக இம்முடிவு மேற்கொள்ளப்பட்டதாக, ரிசர்வ் வங்கி ஆளுநர் திரு சஞ்சய் மல்கோத்ரா, மும்பையில் இன்று நடத்திய செய்தியாளர் கூட்டத்தில், தெரிவித்தார். செய்தியாளர் கூட்டத்தில் வெளியான மேலும் சில தகவல்கள்................

(வாய்ஸ்)

__2025-26-ஆம் ஆண்டில், நாட்டின் பொருளாதார வளர்ச்சி பற்றிய ரிசர்வ் வங்கியின் கணிப்பு, 6.7 சதவிகிதத்தில் இருந்து, 6.5 சதவிகிதமாக குறைக்கப் பட்டுள்ளதாக, ரிசர்வ் வங்கி ஆளுநர் தெரிவித்தார். நடப்பு நிதியாண்டில் சில்லரை விலைப் பணவீக்கம், 4 சதவிகித அளவில் இருக்கும் என எதிர்பார்க்கப் படுவதாகவும் அவர் கூறினார்.__

__உலக அளவிலான வரி விதிப்பு நிலவரங்கள் குறித்து ரிசர்வ் வங்கி ஆளுநர் பேசுகையில், வெளிநாடுகளின் வரி உயர்வினால், இந்தியாவின் நிகர ஏற்றுமதி பாதிக்கப்படலாம் என்றாலும், இந்தியாவின் ஏற்றுமதி-இறக்குமதித் தேவைகளில் நெகிழ்வுத் தன்மை இருப்பதால், பாதிப்பின் அளவை மதிப்பிடுதல் கடினம் என்றார்.__

அமெரிக்காவுடன் உத்தேசிக்கப்பட்டுள்ள வெளி வர்த்தக உடன்பாடு போன்ற கொள்கை நடவடிக்கைகள், நிலவரங்களை நிர்வகிப்பதில் உதவிகரமாக இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

### *மோடி-குமரி அனந்தன்*

சென்னையில் நேற்று இரவு காலமான மூத்த தலைவர் குமரி அனந்தன் மறைவிற்கு, பிரதமர் திரு நரேந்திர மோடி ஆழந்த இரங்கல் தெரிவித்துள்ளார். தமிழ் மொழி மற்றும் கலாச்சாரத்தை பிரபலப்படுத்த பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டவர் குமரி அனந்தன் என்றும், சமூகத்திற்கு ஆற்றிய சேவைகள், மற்றும், தமிழகத்தின் முன்னேற்றத்தில் காட்டிய ஆர்வத்திற்காக, அவர் நினைவு கூரப்படுவார் என்றும், சமூக ஊடகத்தில் வெளியிட்டுள்ள செய்தியில் பிரதமர் கூறி உள்ளார்.

வயது மூப்பினால் காலமான குமரி அனந்தன் உடலுக்கு தமிழக ஆளுநர் திரு ஆர் என் ரவி, முதலமைச்சர் திரு முக ஸ்டாலின், புதுச்சேரி முதலமைச்சர் திரு ரங்கசாமி, சட்டப் பேரவைத் தலைவர் திரு ஆர் செல்வம், மற்றும் அரசியல் கட்சித் தலைவர்கள் பலரும், நேரில் அஞ்சலி செலுத்தினர். குமரி அனந்தன் மகளும், முன்னாள் புதுச்சேரி துணை நிலை ஆளுநருமான டாக்டர் தமிழிசை சவுந்தரராஜனுக்கு இவர்கள் ஆறுதல் கூறினர்.

### *குமரி அனந்தன்-இரங்கல்*

முதுபெரும் அரசியல் தலைவர் குமரி அனந்தன் மறைவு குறித்து புதுச்சேரி முதலமைச்சர் திரு ரங்கசாமி வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், நாடாளுமன்ற உறுப்பினராகவும், தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினராகவும் பதவி வகித்துள்ள குமரி அனந்தன், தேசப் பற்று மற்றும் தமிழ் பற்று நிறைந்தவர் என்றும், நாடாளுமன்றத்தில் தமிழில் கேள்வி கேட்கும் உரிமையை பெற்றுத் தந்தவர் என்றும் கூறி உள்ளார். தமிழில்

சிறந்த பேச்சாளராகத் திகழ்ந்து, இலக்கியச் செல்வர் என்றே அனைவராலும் போற்றப்பட்ட குமரி அனந்தனின் மறைவு, தமிழ் சமூகத்திற்கு மிகப் பெரிய இழப்பாகும் என்று அவர் தெரிவித்துள்ளார். முன்னாள் முதலமைச்சர் திரு வி நாராயணசாமி உள்ளிட்ட தலைவர்களும் குமரி அனந்தன் மறைவிற்கு இரங்கல் தெரிவித்துள்ளனர்.

<u>ஜிப்□ர்</u>

புதுச்சேரி, கடலூர், விழுப்புரம், மற்றும், திருவண்ணாமலைப் பகுதிகளைச் சேர்ந்த முன்னாள் ராணுவத்தினர் மற்றும் அவர்தம் குடும்பத்தினருக்கு, ECHS திட்டத்தின் கீழ் விரிவான மருத்துவ சேவைகளை வழங்க, பாதுகாப்பு அமைச்சகத்தின் முன்னாள் ராணுவத்தினர் நலத்துறை, ஜிப்மர் மருத்துவமனையுடன், புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளது. ஜிப்மர் இயக்குநர் டாக்டர் வீர் சிங் நேகி, சென்னையில் உள்ள ECHS மண்டல மையத்தின் இயக்குநர் கர்னல் திவ்யான்சு மோர்கோடே ஆகியோர் முன்னிலையில், ஜிப்மரில், இன்று இந்த ஒப்பந்தம் கையெழுத்தாயிற்று.

<u>புதுச்சேரி- ஊட்டச் சத்து</u>

மத்திய அரசின் மகளிர் மற்றும் குழந்தைகள் நலத் துறை அமைச்சகம், போஷன் பக்வாடா என்னும் 7-ஆம் ஆண்டு ஊட்டச் சத்து இருவார விழாவைக் கொண்டாடி வருகிறது. இதை ஒட்டி புதுச்சேரியில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிகழ்ச்சிகள் குறித்து, ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டு சேவைகளுக்கான நோடல் அதிகாரி திருமதி நிர்மலா தேவி, எமது செய்தியாளரிடம் பேசுகையில் ……………

(வாய்ஸ்)

*<u>முத்ரா-புதுச்சேரி</u>*

சிறு மற்றும் குறுந் தொழில் முனைவோருக்கு, உத்தரவாதம் கோராமல் வங்கி கடன் வழங்குவதற்கான பிரதமரின் முத்ரா திட்டம் புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் சிறப்பான முறையில் அமலாகி வருகிறது. முத்ரா திட்டத்தினால் பயன் பெற்ற புதுச்சேரியைச் சேர்ந்த பி.டெக் பட்டதாரி கயல்விழி, எமது செய்தியாளரிடம் பேசுகையில், வாழ்க்கையில் மற்றவர்களின் துணையின்றி, தன்னம்பிக்கையுடன் போராடி வெற்றி பெற, இத்திட்டம் தமக்கு உதவி இருப்பதாக கூறினார். அவர் மேலும் கூறுகையில்.........(வாய்ஸ்)

*<u>காரைக்கால் பல் ருத்துவம்</u>*

காரைக்காலில், உலக வாய் சுகாதார தினத்தை ஒட்டி, அரசு மருத்துவமனையின் பல் சிகிச்சைப் பிரிவு சார்பில் இன்று நடைபெற்ற செவிலியர் பயிற்சி மாணவர்களின் விழிப்புணர்வு பேரணியை மாவட்ட துணை ஆட்சியர் திரு அர்ஜுன் ராமகிருஷ்ணன் கொடி அசைத்து தொடக்கி வைத்தார். பல் பராமரிப்பு, புகையிலை தவிர்ப்பு உட்பட, வாய் சுகாதாரத்தின் பல்வேறு அம்சங்கள் குறித்து, இப்பேரணியின் போது, மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

*<u>ஏனாம்</u>*

ஏனாமில், குப்பைக் கிடங்கிற்கு இடம் கிடைக்காமல் துப்புரவுப் பணிகள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், புதுச்சேரி அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி திரு மல்லாடி கிருஷ்ணராவ் புதுச்சேரியில், துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன், மற்றும் முதலமைச்சர் திரு ரங்கசாமியை சந்தித்து, அடவி பாலம் பகுதியில் காலியாக உள்ள தனியார் பொறியியல் கல்லூரி நிலத்தை அரசு கையகப்படுத்தி, குப்பைக் கிடங்காக பயன்படுத்தலாம் என ஆலோசனை வழங்கி உள்ளார். இதைத் தொடர்ந்து அதிகாரி ஒருவரை அனுப்பி சம்பந்தப்பட்ட இடங்களை பார்வையிட முதலமைச்சர்

திரு ரங்கசாமி ஒப்புக் கொண்டுள்ளதாக, திரு மல்லாடி கிருஷ்ணராவ் தெரிவித்துள்ளார்.

<u>கிரிக்கெட்</u>

ஐபிஎல் கிரிக்கெட்டில், இன்று இரவு 7.30 மணிக்கு அகமதாபாத்தில் நடைபெறும் போட்டியில், குஜராத்-ராஜஸ்தான் அணிகள் மோத உள்ளன. நேற்று நடைபெற்ற 2 போட்டிகளில், பஞ்சாப் அணியும், லக்னோ அணியும் வெற்றி பெற்றன.

<u>வானிலை</u>

இன்று, மத்திய மேற்கு மற்றும் தென்மேற்கு வங்க கடலில், ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி நீடிக்கிறது. இது அடுத்த 36 மணி நேரத்தில் மத்திய வங்க கடல் பகுதிக்கு நகர்ந்து, படிப்படியாக வலுக் குறையக் கூடும் என, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இன்றும், நாளையும், கோவை மாவட்ட மலைப் பகுதிகள், நீலகிரி, தேனி, தென்காசி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

<u>பிஆர்டிசி</u>

புதுச்சேரி சாலைப் போக்குவரத்து கழகத்தில் 15 ஆண்டுகளுக்கு மேலாக ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றி வரும் ஓட்டுனர்கள் மற்றும் நடத்துனர்கள், பணி நிரந்தரம் கோரி வேலை நிறுத்தப் போராட்டம் மேற்கொண்டுள்ளனர். ஆயினும் உள்ளூர் மற்றும் வெளியூர் பிஆர்டிசி பேருந்துகளை, நிரந்தர ஊழியர்களைக் கொண்டு இயக்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதால், இதுவரை, அரசுப் பேருந்துப் பயணிகளுக்கு பாதிப்பு இல்லை என்றும் தகவல் வெளியாகி உள்ளது.